**திண்டுக்கல் மாவட்டக் கருவூல அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணை**

**ஆணையிடுபவர்: திரு க. சரவணன், பி.காம்,**

*******

ந.க.எண்.13718/2018/அ1, நாள்.30.01.2019

(திருவள்ளுவராண்டு 2049, தை 16)

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப் பணி - தொகுதி நான்கில் அடங்கிய பணிகள் - தட்டச்சர் பதவி - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் - 2015-2016 - கருவூல கணக்குத் துறையில் தட்டச்சர் - பணி நியமனத்திற்கு தெரிவு செய்யப்பட்டு - திண்டுக்கல் மாவட்ட கருவூலத்தில் தட்டச்சராகப் பணியமர்த்தப்பட்ட திருமதி.ஆ.சாரதாதேவி அவர்களின் பணியினை தட்டச்சர் பதவியில் பணி வரன்முறை செய்தல் ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:

1. சென்னை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளர் கடித எண்:5903/PSD-F2 / 2017, நாள்:3.10.2017.
2. சென்னை, கருவூலக் கணக்குத் துறை முதன்மைச்செயலர் / ஆணையர் அவர்களின் செ.மு.ஆ.ந.க. எண்:42944/2017/சி3, நாள்:13.10.2017.
3. இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.13718/2017/அ1, நாள்:30.10.2017.

*******

**ஆணை:**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட 2016-2017 ஆம் ஆண்டிற்கான தொகுதி - IV போட்டித் தேர்வின் மூலம் தட்டச்சராகத் தெரிவு செய்யப்பட்டு பார்வை 1-ல் கண்ட ஆணை மூலம் கருவூல கணக்குத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை 2-ல் கண்ட முதன்மைச்செயலர் / ஆணையர் அவர்களின் கடிதம் மூலம் திண்டுக்கல் மாவட்ட கருவூலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திருமதி.ஆ.சாரதாதேவி அவர்கள் நிலை-8, ரூ.19500-62000 என்ற ஊதியக் கட்டில் ரூ.19500 மற்றும் ரூ.240 சிறப்பு ஊதியத்தில் பார்வை 3-ல் கண்ட இவ்வலுவலக ஆணையின்படி தட்டச்சராகப் பணி நியமனம் செய்யப்பட்டார். அதன்படி, சம்பந்தப்பட்ட பணியாளர் 30.10.2017 பிற்பகல் இவ்வலுவலகத்தில் தட்டச்சராகப் பணியேற்றார்.

அவர் பணியில் சேர்ந்த நாளான 30.10.2017 பிற்பகல் முதல் அவரது பணி தட்டச்சர் பதவியில் வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

மேலும், சம்பந்தப்பட்ட நபர் பணி வரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு பணிக்காலத்தில் தொடர்ந்து இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவமாகவும், அக்கதுகிகாண் பருவ காலத்திற்குள் அன்னார் "Certificate course in computer on office automation" என்ற தொழிற்கல்வி துறை வழங்கும் கணினி சார்ந்த கல்வித் தகுதி பெறவேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது. சம்பந்தப்பட்ட நபர் ஏற்கனவே "Certificate course in computer on office automation" என்ற தொழிற்கல்வி துறை வழங்கும் கணினி சார்ந்த கல்வித் தகுதி பெற்றிருந்தால் போதுமானது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இந்நிலையில் சென்னை, உயர்நீதி மன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளின் தீர்ப்புக்கு உட்பட்டது.

30/1/19

கருவூல அலுவலர்,
திண்டுக்கல்.

30.01.19

பெறுநர்

1. திருமதி.ஆ.சாரதாதேவி,
   தட்டச்சர்,
   மாவட்டக் கருவூலம்,
   திண்டுக்கல்.
   (உரிய வழிமுறை வாயிலாக)
2. அ2/முதன்மை ஆணைத் தொகுப்பு.

வாய்மையே வெல்லும்

32379